செ.வ.எண்.309 நாள் 06.07.2017

<u>செய்திக் குறிப்பு</u>

<u>வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை</u>

<u>பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வித்தகுதி இணையதளத்தில் பதிவு செய்தல்</u>

<u>காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப அவர்களின் அறிவிப்பு</u>

மாணவர்கள் தங்களது வேலைவாய்ப்பு பதிவினை வேலைவாய்ப்புத்துறையின் https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம். இவ்விணையதளத்தின் மூலம் பதிவு செய்தல், புதுப்பித்தல் , கூடுதல் கல்வி பதிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு அடையாள அட்டை பிரதி எடுத்தல் ஆகியவற்றையும் மேற்கொள்ளலாம். மேலும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பு பதிவு செய்ய விரும்பும் மாணவ, மாணவியர்கள் மதிப்பெண் சான்று வழங்கப்படும் பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு பதிவு செய்து கொள்ளலாம். எனவே, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்களது 10ம் வகுப்பு கல்வித் தகுதியினை பதிவு செய்த வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையுடனும், புதியதாக பதிவு செய்ய விரும்புவோர் குடும்ப அட்டை/ஆதார் அட்டை/பான் அட்டை(Pan Card)/மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை/கடவுச்சீட்டு (Passport) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை மதிப்பெண் சான்று பெறும் போது எடுத்து வர வேண்டும். பள்ளிகளில் வேலைவாய்ப்பு பதிவுப்பணி நடைபெறும் 15 நாட்களுக்கும் மதிப்பெண் சான்று வழங்கப்படும் நாளையே பதிவு மூப்பு தேதியாக வழங்கப்படும்.

இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.